# வேற்றுமைகள் - திட்டக்கட்டுரை

## குறிப்புச்சட்டகம்

- முன்னுரை
- வேற்றுமைகள்
- வேற்றுமை - வகைகள்
- முடிவுரை

### முன்னுரை :-

பெயர்ச் சொற்கள் உருபினை ஏற்று வேறுபட்ட பொருளைத் தருவது வேற்றுமை எனப்படும். இவ்வேற்றுமையானது தமிழ் மொழியில் மட்டுமன்றி மலையாளம், கன்னடம், தோடா, கொடகு போன்ற திராவிட மொழிகளிலும் காணப்படுகிறது. திராவிட மொழிகளிலுள்ள வேற்றுமை குறித்தும் அவற்றின் வகைகள் குறித்தும் இக்கட்டுரையில் காண்போம்.

Edit with WPS Office

## வேற்றுமைகள் :-

* திராவிட மொழிகளில் வேற்றுமைகள் ஒட்டுநிலையாக உள்ளன. பெயர்ச்சொற்களின் பின்னர் இணைக்கப்படும் ஒவ்வொரு இணைப்பும் இம்மொழிகளில் பொதுவாக ஒரு புதிய வேற்றுமையைத் தோற்றுவிக்கின்றன. இவ் வேற்றுமைகள் தொடர்களிலுள்ள பெயருக்கும், வினைக்கும் இடையேயுள்ள தொடர்பினைக் காட்டி நிற்கும்.

* திராவிட மொழிகளின் முற்காலத்தில் வேற்றுமையை உணர்த்த தனிச் சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்றும் நாளடைவில் அச்சொற்கள் திரிந்து தனித்தியங்கும் ஆற்றலற்ற உருபன்களாக மாறி, பின்னர் உருபுகள் என்ற நிலையை அடைந்திருக்க வேண்டுமென்றும் டாக்டர் கால்டுவெல் கருதுகின்றார்.

* திராவிட மொழிகள் வேற்றுமை உருபுகளை ஏற்பதற்கும் இந்தோ - ஐரோப்பிய மொழிகள் வேற்றுமை உருபேற்பதற்குமிடையே பல வேறுபாடுகள் உள்ளன.

* திராவிட மொழிகளில் வேற்றுமைகள் பொதுவாக பெயர் + சாரியை + வேற்றுமை உருபு என்ற முறைப்படி அமைகின்றன.

* திராவிட மொழிகளில் பெயர்களுக்கேற்ப உருபுகள் மாறும் நிலை இல்லை. மாறுதல்கள் அனைத்தும் பெயர்களுக்கும் உருபுகளுக்கும் இடையில் இணைக்கப்படும் சாரியைகளிலே நிகழ்கின்றன. இம்மொழிகளில் பெயரே வேற்றுமை ஏற்கும் அடிச் சொல்லாக அமையும்.

* இந்தோ - ஐரோப்பிய மொழிகளில் ஒருமைக்கும், பன்மைக்கும் தனித்தனி உருபுகள் உள்ளன. திராவிட மொழிகளில் அவ்வாறில்லை.



Edit with WPS Office

பெயர்ச் சொல்லின் ஈறும், உருபும் வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது திரிந்து நிற்கும்.

வேற்றுமைகள் ஒவ்வொரு மொழியின் (அ) மொழிக்குடும்பத்தின் இயல்பிற்கேற்ப அமைவதால் அவை மொழிக்கு மொழி எண்ணிக்கையால் வேறுபடுகின்றன. சான்றாக 8 வேற்றுமைகளும் இலத்தீன் மொழியில் 6 வேற்றுமைகளும், கிரேக்க மொழியில் 5 வேற்றுமைகளும், பனிஷிய மொழியில் 18 வேற்றுமைகளும் உள்ளன.

தொல்காப்பியர் காலத்திற்கு முன்னர் தமிழில் வேற்றுமைகளை ஏழாகக் கருதும் மரபு இருந்ததென்பதும், பின்னர் அவர் காலத்தில் விளி வேற்றுமையினையும் இணைத்து வேற்றுமைகளை எட்டு என்று வகுத்தனர் என்பதும்.

"வேற்றுமை தாமே ஏழென மொழிப"

"விளி கொள்வதன்கண் விளியொடு எட்டே"

என்ற அவர் கூற்றால் தெளிவாகின்றன. மலையாளம், கன்னடம் தெலுங்கு போன்ற மொழிகளின் இலக்கண நூல்களான "லீலா திலகம்", "சப்தமணி தர்பணம்", "பாலவியாகரணமு" என்ற நூல்களும் இம்மொழிகளில் தமிழைப் போன்று 8 வகையான வேற்றுமைகள் உள்ளன என்று குறிப்பிடுகின்றன.

**வேற்றுமை வகைகள் :-**

வேற்றுமைகள் எட்டு வகைப்படும் அவை முதல் வேற்றுமை, 2-ம் வேற்றுமை, 3-ம் வேற்றுமை, 4-ம் வேற்றுமை 5-ம் வேற்றுமை, 6-ம் வேற்றுமை, 7-ம் வேற்றுமை, 8-ம் வேற்றுமை ஆகியன.

**முதல் வேற்றுமை (அ) எழுவாய் வேற்றுமை :-**

திராவிட மொழிகளில் எழுவாய் வேற்றுமை தாய



Edit with WPS Office

அடையாத பெயராகவே உள்ளது. முதல் வேற்றுமையினை விளக்கும் தொல்காப்பியனாரும், நன்னூலாரும் முறையே

"எழுவாய் வேற்றுமை பெயர் தோன்று நிலையே"
(தொல் - சொல். 65)

"எழுவா யுருபு திரிபில் பெயரே"
(நன்னூல். சொல். 295)

எனக் கூறினர். எனவே எழுவாய் வேற்றுமைக்கென தனி உருபு கிடையாது.

திராவிட மொழிகளின் மூவிடப் பெயர்களுக்கு எழுவாய் வடிவம், வேற்றுமை ஏற்கும் வடிவம் என்று இரு வடிவங்கள் உள்ளன.

[எ.கா]

தமிழ் யான் } > என்னை
நான் }

நாம் > நம்மை

கன்னடம் நானு > நன்ன
நீனு > நின்ன
தானு > தன்ன

2-வேற்றுமை (அ) செயப்படுபொருள் வேற்றுமை.

கோண்டி, கோண்டா போன்ற மொழிகளில் 2-ம் வேற்றுமை 4-ம் வேற்றுமை ஆகியவற்றின் பொருட்களைச் செயப்படுபொருள் வடிவமே உணர்த்திவருகிறது. மூலத்திராவிட வடிவங்களான *-an, *:...(v.)nk போன்ற உருபுகள் அதிகத் திரிபின்றி திராவிட மொழிகளில் பயின்று வருகின்றன.

'ஐ' உருபு தமிழ், மலையாளம் போன்ற தென் திராவிட மொழிகளில் இடம் பெறுகின்றது. இவ்வுருபு மலையாள மொழியில் எகர உருபாகத் திரிகின்றது (எ.கா) அவனை > அவனெ.

3-ம் வேற்றுமை (அ) கருவிப் பொருள் (அ) உடன் நிகழ்ச்சி பொருள் வேற்றுமை :-

மரபிலக்கண வல்லுநர்கள் 3-வேற்றுமை, கருவி, கருத்தா.



Edit with WPS Office

உடன் நிகழ்ச்சி, போன்ற 3 பொருட்களில் வரும் என்பர். இவ்வனைத்தையும் இணைந்து ஒரு வேற்றுமையாகக் கொள்வதை விட இதனைக் கருவிப் பொருள் வேற்றுமை, உடனிகழ்ச்சிப் பொருள் வேற்றுமை என்று இரண்டாகக் கொள்வதே பொருந்தும்.

கருவிப்பொருள் வேற்றுமை, உருபுகளாக ஆல், ஆன், அ, ஓடு கொண்டு என்பன உள்ளன. இவற்றுள் ஓட(அ) ஓடு உருபு தெலுங்கு மொழியில் கருவிப்பொருளை உணர்த்தப் பயன்படுகிறது [எ.கா]

நிப்பு ஓடு - நெருப்பால்

தமிழ், மலையாளம், ஆகிய மொழிகளில் ஒடு, ஓடு என்னும் உருபுகளோடு 'உடன்' என்ற சொல்லுருபும் உண்டு என்னும். கோடா மொழியில் ஒடு என்னும் உருபு மட்டுமே உடனிகழ்ச்சிப் பொருளைத் தருகின்றன. ஆன் என்னும் உருபு பழந்தமிழில் உடனிகழ்ச்சி பொருளை தருகின்றது.

ஒடு என்னும் உருபு இலக்கியங்களில் ஒப்புமைப் பொருளில் வருகின்றது. [எ.கா] மதியோடு ஒக்கும் முகம்.

## 4-ம் வேற்றுமை (அ) கொடைப்பொருள் வேற்றுமை:

தமிழில் 4-ம் வேற்றுமை கொடை, பகை, நட்பு, தகவு, முதற்காரணம், நிமித்தகாரணம், முறை ஆகிய பொருட்களில் வருவதாக இலக்கண ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

திராவிட மொழிகளில் 4-ம் வேற்றுமை உருபுகளாக கு, கெ, கு, க, ஒ, கெ, ஜெ, கோ, உன், (ப)கு, இக், அக, இக, திங்க போன்றன உள.

[எ.கா]
(1) மரத்திற்கு - தமிழ்
(2) மரத்தினு - மலையாளம்
(3) மரக்கெ - கன்னடம்
(4) கெ மனுகு - தெலுங்கு
(5) மரக்கு - துளு.

## 5- வேற்றுமை (அ) நீங்கற் பொருள் வேற்றுமை :-

இல், இன், இம் போன்ற உருபுகள் 5- ஆம் வேற்றுமை உருபுகளாகத் தென்திராவிட மொழிகளில் வழங்குகின்றன. தமிழ், மலையாளம், கன்னடம், துளு, குருக், பராகுயி போன்ற மொழிகளில் (கொலாமி - tanat, நாயக்கி - ar, tal, பர்ஜி - are, tag arre, மால்டோ - ite, பராகுயி - ஆன் -> ஐந்தாம் வேற்றுமை) இவ்வேற்றுமை உருபுகள் ஒப்புமைப் பொருளை உணர்த்தவும் பயன்படுகின்றன.

தமிழ், மலையாளம் போன்ற மொழிகளில் இல், இன் என்பன இடப்பொருளை மட்டுமே தருகின்றன. நீங்கற் பொருளை உணர்த்த தமிழில் 'இருந்து' என்ற சொல்லுருபும், மலையாளத்தில் இதற்கு நிகரான 'நின்று' என்ற சொல்லுருபு பயன்படுத்தப்படுகின்றன.

(எ.கா) மரத்தில் இருந்து விழுந்தது - தமிழ்
மரத்தில் நின்று வீணு - மலையாளம்.

## 6- ம் வேற்றுமை (அ) உடைமைப் பொருள் வேற்றுமை :-

6- ம் வேற்றுமை உருபுகளாக அது, அ, அது, இன், உடைய, உடை, ன்ற, ஆ, த, ன்னை, தை, ஒவ், ர, ற்ற, அது, அதி, அத போன்ற உருபுகள் திராவிட மொழிகளில் உள்ளன.

தமிழில் பெயர்ச்சொல்லோடு உருபு சேர்க்காமல் இன் சாரியையானை இணைத்து 6- ம் வேற்றுமை பொருளை உணர்த்தும், மரபும், இன் சாரியைக்குப் பின் 6- ம் உருபானை இணைத்து அப்பொருளை உணர்த்தும் மரபு உள்ளன.

(எ.கா) மரத்தின் கொம்பு
மரத்தினு கொம்பு

## 7- ம் வேற்றுமை (அ) இடப்பொருள் வேற்றுமை :-

தமிழ் இலக்கண வல்லுநர்கள் இடப்பொருள் உணர்த்தும் சொற்கள் பலவற்றையும் 7- ம் வேற்றுமை உருபு என்பர்.



Edit with WPS Office

திராவிட மொழிகளில் இல், இன், கண், கால், இடம், உள் அது, அன், ஆன், கி, கு, து, '(n) adan, ஒன், ஏன், அடி போன்ற பல உருபுகள் உள்ளன.

கன்னடத்தில் ஒள், அல், அல்லி, இல்லி போன்ற வடிவங்கள் உள்ளன. (எ.கா) மனெயொள், மரல், மரல்லி, அன் உருபு கன்னடம், கொண்டா, குவி, குயி போன்ற மொழிகளிலும் அந்த உருபு தமிழ், மலையாளம், கொண்டி, கோலாமி போன்ற மொழிகளிலும் காணப்படுகின்றது.

8-ம் வேற்றுமை (அ) விளி வேற்றுமை :-

விளி வேற்றுமைக்கென தனி உருபுகள் அதிகமாக இலக்கண ஆசிரியர்களால் வரையறுக்கப்படவில்லை. எனினும் *e, *ō, என்ற 2 உருபுகளை மூலத்திராவிட விளி வேற்றுமை உருபுகள் எனலாம். நன்னூலார் "ஏ" என்னும் 8- வேற்றுமை உருபைச் சுட்டிச் சொல்லுகின்றார். இடைக்கால தமிழ் இலக்கியங்களில் 'ஏ' என்னும் உருபு இணைந்து விளி வேற்றுமை அமைகின்றது (எ.கா) அண்ணலோ - (கம்பராமாயணம்)

முடிவுரை :-

இவ்வாறாக எட்டாக வகைப்படுத்தப்பட்ட வேற்றுமை உருபுகள் அனைத்தும் தமிழ், மலையாளம் போன்ற திராவிட மொழிகளுக்கும் பொதுவான (அ) சிறிது மாறுபட்டு அமைந்து சொல்லுக்கும் பொருளுக்கும் அழகு சேர்க்கின்றன எனலாம்.



Edit with WPS Office

இரு உருபன்கள் இணைந்த சொற்களாக உள்ளன. எனவேதான் பொருளைத் தருகின்ற மிகச் சிறிய அசையே உருபன் என்று மொழிநூலார் உருபனுக்கு விளக்கம் தருகிறார்.

உருபன்களை மொழிநூலார் கட்டு வடிவம் என்றும், தனி வடிவம் என்றும் இரு கூறுபடுத்துவர். தனித்தியங்கும் ஆற்றலுடைய உருபன்களைத் தனி வடிவங்கள் என்றும், ஆற்றலற்றவாய், பிற தனி வடிவங்களோடு தனி இணைந்தியங்கும் வடிவங்களைக் கட்டு வடிவங்கள் என்று கூறுவது மரபு.

<u>சொற்கள் :-</u>

எழுத்து தனித்தோ, தொடர்ந்தோ, உருபன் தனித்தோ, தொடர்ந்தோ சொற்கள் அமைகின்றன. மொழிநூலார் புளூம்பீல்டு சொல்லை மிகச் சிறிய தனிவடிவம் என்று விளக்கிச் சொல்லுகிறார். சொற்களைப் பொதுவாக மொழிநூலார் " பொதுவான பொருள் உணர்த்தும் சொற்கள் என்றும் இரு கூறாகப் பகுப்பர். மரபிலக்கண அறிஞர்கள் பெயர், வினை, இடை, உரி என்று நான்காகப் பகுக்கின்றனர். தன்மை, முன்னிலை, படர்க்கை என்று இடத்தைபொட்டியும் திணை, பால், எண் ஆகியவற்றை ஒட்டியும் வேறுபடும் இயல்புடையது பெயர்ச்சொல். வேற்றுமையை ஏற்பது பெயர்ச்சொல்லின் சிறப்பியல்பாகும்.

இடைச்சொல், உரிச்சொல், ஆகிய இரண்டையும் இணைத்து சொற்களை நான்கு கூறுபடுத்தும் முறை ஏற்பட்டிருக்க வேண்டும் என்று தொல்காப்பியர் கூறுவார்.

[எ.கா] சொல்லெனப்படுப பெயரே வினையென்று
ஆயிரண்டு என்ப அறிந்திசினோரே

இடைச்சொற்களவையும் உரிச்சொற்களையும்
அவற்று வழிமருங்கின் தோன்றும் என்ப என்று

இலக்கணம் கூறுகிறார் எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டு சொற்களை

Edit with WPS Office

ஓரெழுத்து ஒருமொழி

ஈரெழுத்து ஒருமொழி

இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் சொற்கள்.

இவற்றை நூலா பகுதி, பகாபதம் என்று சொற்களை கூறுபடுத்துகிறார் நன்னூலார்

சொல்லாக்கம் :-

திராவிட மொழிகளில் அடிச்சொற்கள் தனித்து நின்று சொல்லாக செயல்படுவதைக் காணலாம். வினையடிச் சொற்கள் எல்லாம் இம்மொழியில் Vty: tozqfshf (imperative Forms) வினைச்சொற்களாகும், கால இடைநிலை, எதிர்மறை இடைநிலை தன்வினை . பிறவினை உருபுகள் , பாலறிகுறிகள் ஆகியன ஒட்டியொட்டி ஒட்டுநிலையாக சொற்கள் அமைகின்றன.

(எ.கா) பூ - பெயர்

பூத்தது - வினை.

சொல்லாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு அமையும் சொற்கள் தனிநிலை மொழி, ஒட்டுநிலை மொழி, உட்பிணைப்புநிலை மொழி என்று மொழிகளை மூவகையாகப் பிரிப்பர். இவற்றுள் திராவிட மொழிகள் ஒட்டுநிலை மொழி என்று மொழிகளை மூவகையாகப் பிரிப்பர். இலக்கணக் கூறுகள் அடிச்சொற்களோடு ஒட்டியொட்டி அமைந்து பொருள் நிற்கும் அடிச்சொற்களோடு இணையும் இணைப்புகளை பொதுவாக

* இலக்கண வேறுபாடு உணர்த்துவன
* பொருள் சிறப்புத் தருவன
* ஆசாந்துணை ஆவன.

முடிவுரை :-

இவ்வாறாக உருவங்களும் 'சொல்லாக்கங்களும் அறிதில் புரிந்து கொள்ள கூடியதாய் அமைகிறது

## தனியுருபும் கட்டுருபும் :-

ஆங்கிலத்தில் boy, man இவை தனியுருபுகள். இவை உருபு பெறாது தனித்து நிற்கும். தமிழில் மரம், வீட்டு இவை தனியுருபுகள் boyish, manly என்னும் பொழுது -ish, -ly இவை கட்டுருபுகள்.

மரத்தை என்னும் பொழுது இன், ஐ இரண்டும் கட்டுருபுகள் இவைகளின் முன் - என்ற ஒரு குறி இட்டும் அவை பின்பு ஒரு உருபை பெற்று வருமானால் பின் - என்ற குறி இட்டும், முன்னும் பின்னும் உருபுகளை பெற்று வருமாயின் முன்னும், பின்னும்

## வேரும் அடியும் :-

ஒரு சொல்லின் பொருள் நிறைந்து நிற்கும் பகுதியே வேர். கொடுத்தான் என்பதைப் பார்த்துக் கொண்டே போனால், ஆன் என்ற ஆண்பால் ஒருமை உருபை ஏற்பதற்குரிய அடி கொடு என்பது த்த் - என்ற இறந்தகால உருபை ஏற்பதற்குரிய அடி கொடு என்பது. கொடு என்பதை பிரிக்க முடியாது. பொருள் நிறைந்து நிற்கும் இடம் அதுவே. இதனை வேர் என்கிறோம். வேரெல்லாம் தமிழில் அடியாக வருகின்றன. கொடுத்த் - என்பது அன் உருபை ஏற்றற்குரிய அடி ஆனால் அது வேர் அன்று கொடு என்பது த்த் என்ற உருபை ஏற்றற்குரிய அடி. அதுவே வேரும் ஆகும்.

ஓடு, ஓட்டு இரண்டையும் ஒப்பிடும்பொழுது, டு என்பது தன்வினை உருபாகவும், ட்டு என்பதைப் பிறவினை உருபாகவும் கொள்ளலாம் எஞ்சி நிற்பது ஓ என்பது. இதுவே அச்சொல்லின் வேர் இது தனித்து நிற்காது.

பல சொற்களில் இரு 2-ற்கு மேற்பட்ட வேர் இருக்கும் Blackbird, catfish என்ற ஆங்கில சொற்களில் இரண்டு வேர்கள் இருக்கின்றன.

## ஒரணமாதல் :-

இரு வேறுபட்ட மொழிகள் ஓர் இனத்தைச் சார்ந்த ஒலிகளாக மாறுவதை ஒரணமாதல் என்பர். வேறணமாதலை பிறபான்மை பொருண்மை மொழியால் காண்கிறோம்,

Edit with WPS Office